சுருக்கம்

பள்ளிக்கல்வி – சமச்சீர் கல்வி – அறிவியல் பாடத் தேர்வுகள் நடத்துதல் – செயல்முறை மற்றும் தனித் தேர்வர்கள் செயல்முறை தேர்வு முறை நடைமுறைப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி(க்யு)துறை

அரசாணை (நிலை) எண்.144

நாள்: 20.09.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042
புரட்டாசி 3,

படிக்கவும் :–

1. அரசாணை(நிலை) எண்.21, பள்ளிக் கல்வி(க்யு)த்துறை, நாள் 01.02.2010.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 85300/ஐ/இ2/2009, நாள் 18.10.2010 மற்றும் 83375/I/2011, நாள் 25.08.2011.

---

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட ஆணையில், சமச்சீர் கல்வித் திட்டத்தில் அனைத்து வகைப் பள்ளிகளிலும் ஒன்பதாம் வகுப்பு இறுதித் தேர்வு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு (Board Examinations) அறிவியல் பாடப் பிரிவில் கருத்தியல் தேர்வு மற்றும் செய்முறை தேர்விற்கு முறையே 75 + 25 மதிப்பெண்கள் என நிர்ணயம் செய்து அரசால் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் 10ஆம் வகுப்பிற்கான அறிவியல் பாடத்தின் கீழ் செயல்முறை மற்றும் தனித் தேர்வர்கள் செயல்முறை தேர்வுமுறைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து பாட ஆக்கக் குழுத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் பள்ளிக்கல்வி இயக்குநர் உரிய ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே 10ஆம் வகுப்பு அறிவியல் பாடத்தின் கீழ் செயல்முறை மற்றும் தனித்தேர்வர்கள் செயல்முறைத் தேர்வுகளை நடைமுறைப்படுத்துவது குறித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

தேர்வுக் கால அளவு :

செய்முறைத் தேர்விற்கு 2 1/2 மணி நேரம்

1. இயல் அறிவியல் (Physical Science) நேரம் – 1 1/4 மணி நேரம்
2. உயிர் அறிவியல் (Biological Science) நேரம் - 1 1/4 மணி நேரம்

## செய்முறைத் தேர்வு வினாக்கள் :-

செய்முறைக்கென பாடப்புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ள கையேட்டில் உள்ள ஆய்வுகளில்

இயல் அறிவியலில் :-

| | | |
|---|---|---|
| இயற்பியல் | – | ஒரு வினா |
| வேதியியல் | – | ஒரு வினா |

உயிர் அறிவியலில் :-

| | | |
|---|---|---|
| தாவரவியல் | – | ஒரு வினா |
| விலங்கியல் | – | ஒரு வினா |

ஆகிய வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும். விடை அளிக்க வேண்டிய வினாக்கள் மாணவர்களாகவே, செய்முறை ஆய்வு கையேடு உள்ள தொகுப்பிலிருந்து மந்தண முறையில், குலுக்கல் (Lot System) முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். கணக்கீடு வினாக்களுக்கு ஒரு கணக்கீடு (Single Reading) எடுத்தால் போதுமானது.

## செய்முறைத் தேர்வு மதிப்பெண் முறைகள் :-

இயல் அறிவியலில் :-

இயற்பியல் – ஒரு வினா – 5 மதிப்பெண்
வேதியியல் – ஒரு வினா – 5 மதிப்பெண்
= 2 வினா மொத்தம் 10 மதிப்பெண்கள்

உயிர் அறிவியலில் :-

தாவரவியல் – ஒரு வினா – 5 மதிப்பெண்
விலங்கியல் – ஒரு வினா – 5 மதிப்பெண்
= 2 வினா மொத்தம் 10 மதிப்பெண்கள்

என மொத்தம் 20 மதிப்பெண்களுக்கு விடையளிக்க வேண்டும்.

## அகமதிப்பீடு

| | | |
|---|---|---|
| மாணவர்கள் ஆய்வுக் கூட வருகை | – | 1 மதிப்பெண் |
| மாணவர் ஆய்வக செயல்திறன் | – | 1 மதிப்பெண் |
| மாணவர் ஆய்வக ஈடுபாடு | – | 1 மதிப்பெண் |
| ஆய்வக பதிவுக் குறிப்பேடு | – | 2 மதிப்பெண்கள் |
| மொத்தம் | – | 5 மதிப்பெண்கள் |

மாற்றுத் திறனுடைய மாணவர்கள்

மாற்றுத் திறனுடைய மாணவர்கள் உரிய ஆய்வு அலுவலர்களின் அனுமதியுடன், சொல்லி எழுதுபவர்கள் (Scribe) பயன்படுத்திக் கொள்ளலாம்.

அல்லது

மாற்றுத் திறனுடைய மாணவர்கள் விரும்பினால் கருத்தியல் தேர்வில் மொத்தம் 75 மதிப்பெண்களுக்கு மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை 100-க்கு மாற்றி வேறுபாட்டை செயல்முறை மதிப்பெண்ணாகக் கொள்ளலாம்.

10-ம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுதும் தனித் தேர்வர்கள் தங்கள் பெயரினை ஜூன் மாதம் இறுதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். சனிக்கிழமைகளில் செய்முறைகள் செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும். 80 சதவீத வருகை இருத்தல் வேண்டும். மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வருகையில் சலுகை காட்டலாம்.

4. மேலே பத்தி-3ல் ஆணையிட்டுள்ளவாறு, சமச்சீர் பாடத்திட்டத்திற்கான 10 ஆம் வகுப்பிற்கான அறிவியல் பாடத்திற்கு செயல்முறை மற்றும் தனி தேர்வர்கள் செயல்முறை தேர்வு முறையினை நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பள்ளிக்கல்வி இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், மற்றும் அரசு தேர்வுகள் இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தபடுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர்,
சென்னை-6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை-6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை-6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை-6.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் கழகம், சென்னை-6

நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
பள்ளிக்கல்வித் (வ.செ) மற்றும் (வி) துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

20/9/11

அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகம்
சென்னை-600 006

ந.க.எண் 042318/எ1/2011 நாள் 23.09.2011

X (அரசாணை (நிலை) எண் 144, பள்ளிக் கல்வி (க்ய) துறை, நாள் 20.09.2011-ன்) X நகல் தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது

பெறுநர்